**அ.வ.எண். 102/2021**
**வா.சா.1 : நந்தினி**
**தேதி : 11.09.2025**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

என் தகப்பனார் பெயர் சாமியப்பன். என் தகப்பனாருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி தான் இந்த வழக்கின் முதலாம் வாதி. நானும் 3ம் வாதியும் இரண்டாம் மனைவி தங்கம்மாளுக்கு பிறந்தோம். முதலாம் வாதிக்கு ஒரு குழந்தை பிறந்து இறந்துவிட்டார். அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் சாமியப்பன் தான் எங்கள் குடும்பத்தை பார்த்துக்கொண்டார். இந்த சொத்திற்கும் குடும்பத்திற்கும் உங்கள் தந்தை சாமியப்பன் தான் கர்த்தாவாக இருந்து பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். என் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். என் தகப்பனார் இறக்கும் வரை சொத்து சம்மந்தப்பட்ட அனைத்து விவரங்களும் அவருக்கு தான் தெரியும், இறக்கும் வரை அவர்தான் பராமரித்து வந்தார். வழக்கு சொத்திற்கு உரிய பட்டாவை நான் பார்த்துள்ளேன். சர்வே எண் 113, 115 ஆகியவைகளில் உள்ள உட்பிரிவில் உங்கள் தகப்பனாருக்கு என்னென்ன பாத்தியப்பட்டது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை தாவா சர்வே எண்கள் 113, 115 ல் உள்ள உட்பிரிவுகள் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் நான் எடுத்துள்ளேன். நீங்கள் மேற்சொன்ன சர்வே எண்ணில்

உட்பிரிவுகளுக்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த பாகப்பிரிவினை வழக்கில் சர்வே எண் 113–ன் உட்பிரிவுகளுக்கும் 115 ன் உட்பிரிவுகளுக்கும் தாக்கல் செய்துள்ளோம். யூடிஆரில் தமிழக அரசால் 1985–ல் யார் யார் அனுபவத்தில் இருந்தார்களோ அவர்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் யூடிஆர் பட்டா தவறாக வழங்கப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வே எண்.113–ல் வில்லங்கம் போட்டு பார்த்தீர்களா என்றால் ஆமாம். 113–ல் உள்ள உட்பிரிவுகளுக்கான கிரையம் பெற்ற நபர்கள் அனைவரையும் கட்சி சேர்த்துள்ளீர்களா என்றால் சேர்த்துள்ளோம். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.5 ல் "அரசு காலனியின் நிலத்திற்கு கிழக்கு" என்று கண்டுள்ளது. அந்த அரசு காலனி நிலம் சர்வே எண்.113/3 என்ற சர்வே எண்ணில் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அரசு காலனியில் அதாவது சர்வேஎண்.113/3 ல் 44 ஆதிதிராவிடர் குடியிருப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன நிலத்தில் குடியிருக்கும் நபர்களை இந்த வழக்கில் நீங்கள் கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன 44 நபர்களையும் இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் இந்த பாகப்பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சர்வேஎண்.113/4 என்ற நிலத்தை பல வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் நான் சிறுவயதில் இருக்கும்போது அவ்வாறு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன காலையில் பிரிக்கப்பட்டுள்ள வீட்டு மனைகளை உங்கள் தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை இது குறித்து எந்தவொரு

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். 06.03.2019 ஆம் தேதியன்று தண்டபானி என்பவர் காலை எண்.113/4 ல் மனைகளில் உள்ள ரோடுகளை அரசாங்கத்திற்கு தானம் கொடுத்துள்ளார் என்றும் தானம் பெற்ற தமிழக அரசை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றும் தமிழக அரசை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வழக்கு போட்ட காரணமே வழக்கு சொத்துக்கள் தற்போது அதிக விலைக்கு போவதால் பிரதிவாதிகளுக்கு ஏதோ ஒரு வகையில் இடையூறு செய்து பிரதிவாதிகளிடமிருந்து ஏதோ ஒரு தொகை பெற வேண்டும் என்பதற்காக தாவா தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சின்னாள் கவுண்டர் மகன் பிச்சைமுத்து வாரிசுகள் தான் 13, 14 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். ஆகையால் தான் பட்டாக்களில் 13, 14 பிரதிவாதிகளின் தகப்பனாரின் பெயரை சி.பிச்சைமுத்து என கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சி.பிச்சைமுத்து என்பவர் 1944–ல் கிரையம் பெற்ற பூமிதான் சர்வே எண்.113, 115 என்று சொன்னால் சரிதான். அ.பிச்சைமுத்து என்பவர் சர்வே எண்.113/4 ல் 1986 யூடிஆரில் பெயர் கண்டுள்ளது. அவருக்கு எப்படி பாத்தியம் என்பது உங்களுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.113/4 ஆனது 1977 ஆம் ஆண்டு அ.பிச்சைமுத்துவின் மகன் சாமியப்பகவுண்டருக்கு கிரையம் பெற்றதால் அவரது தகப்பனார் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1975 ல் பங்குதாரர்கள் வாய்மொழியாக சர்வே எண்.113, 115 ஐ பாகம் பிரித்துக்கொண்டனர் என்று சொன்னால் சரியல்ல. இதன் அடிப்படையில் 1985 ல் ஏற்பட்ட யூடிஆர் பட்டாக்களை

அனுபவத்தில் உள்ளவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1975 லிருந்து யார் யார் பாகம்படி அனுபவித்து வந்தார்களோ அவரவர்கள் பெயருக்கு பட்டா மாறியுள்ளது என்று சொன்னால் சரியல்ல பாகப்பிரிவினையே நடக்கவில்லை. வாய்மொழி பாகக்கறார் ஏற்பட்டதால் தான் உங்கள் தந்தை அவர் இறக்கும் வரை பட்டா மாறுதலுக்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் என் தகப்பனாருக்கு விவரம் தெரியாது. உங்கள் பிரமாண வாக்குமூலத்திலோ, உங்கள் பிராதிலேயோ உங்கள் தகப்பனாருக்கு விவரம் தெரியவில்லை என்று கூறவில்லை என்றும் தற்போது தான் முதல்முதலாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. 1975 ஆம் ஆண்டிலிருந்து யூடிஆரின் தொடர்ச்சியாக சர்வே எண்.113/1, 113/6, 115/1 மற்றும் 115/5 இவற்றில் சி.பிச்சைமுத்து அவர்களின் வாரிசுகள் தான் அனுபவித்து வருகிறார்கள். ஆகையால் மேற்சொன்ன சர்வே எண்களில் உங்களுக்கு எந்தவித பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.113/5 மற்றும் 113/7 ஆகிய இடங்கள் பொது இடங்கள் என்றும் அவைகளில் உங்களுக்கு எந்தவொரு பாகமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண். 113 மற்றும் 115 ஆகியவற்றில் உள்ள உட்பிரிவுகளை 50 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதிகளும் மற்றும் வெவ்வேறு நபர்களும் அனுபவித்து வருவதால் உங்களுக்கு அதில் பாகம் கோர உரிமை இல்லை என்று சொன்னால் இதுவரை பொதுவில் இருந்தது இனிமேல் பாகப்பிரிவினை செய்து கொடுக்கவேண்டும். 1975 ஆண்டுக்கு பிறகு யாருக்கும் பொதுவான அனுபவம் தாவா சொத்தில் இல்லை என்றும் அவரவர் தனிப்பட்ட முறையில் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால்

சரியல்ல. நீங்கள் கூட்டு அனுபவத்தில் இருப்பதால் வழக்கில் பொய்யாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. சி.பிச்சைமுத்துவின் வாரிசுகள் அனைவரும் பெண்களாக உள்ளதால் வழக்கு போட்டால் அவர்கள் பயந்து உங்களுக்கு சொத்துக்களை எழுதித்தந்துவிடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் தகப்பனார் தாவா சொத்தில் எந்தெந்த இடத்தை அனுபவித்து வந்தார் என்றும் உரிமைஉள்ளது என்பதற்காக நீங்கள் இந்த வழக்கில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்கள் தந்தை பெயர் க.சாமியப்பன் என்று சொன்னால் சரிதான். உங்கள் தகப்பனார் க.சாமியப்பனுக்கு சர்வே எண்.113/2 0.85.5 ஹெக்டர் விஸ்தீரணமும் ,சர்வே எண்.115/3 0.09.5 ஹெக்டர் விஸ்தீரணமும் மற்றும் சர்வே எண்.115/7 0.10.0 ஹெக்டர் விஸ்தீரணமும் ஆகிய நிலங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டு உங்களுடைய தனி அனுபவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேல்சொன்ன உங்கள் தகப்பனார் பெயரில் தனி அனுபவத்தில் உள்ள பூமிகளை கூறினால் உங்கள் வழக்கு உங்களுக்கு எதிராக செல்லும் என்பதால் தான் அதனை மறைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கூறுவது போல் தாவா சொத்தில் கூட்டு அனுபவித்தில் இல்லை என்றும் நீதிமன்றக்கட்டணம் குறைவாக கட்டியிருப்பதாலும் அவசியமான தரப்பினரை வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு முதல்நிலையில் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.113/4 தண்டபானி என்பவர் கிரையம் கொடுத்ததில் 13, 14 பிரதிவாதிகளுக்கு சி.பிச்சைமுத்து வகையறாவிற்கு எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணம் வழக்கு தாக்கல் செய்வதற்கு 10

ஆண்டுகளுக்கு முன்பாகவே ஏற்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 1977–ல் ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் நான்கு எல்லைகள் கூறப்பட்டுள்ள விவரம் என் தகப்பனாருக்கு தெரியும்என்றும் அந்த கிரைய ஆவணத்தில் கண்டுள்ள பூமியில் உங்கள் தகப்பனாருக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் உங்கள் தகப்பனார் இறக்கும் வரை ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால்சரியல்ல. 1977–ல் கண்டுள்ள கிரைய சாசனத்தில் 1975 ல் வாய்மொழி பாகக்கறார் ஏற்பட்ட விவரம் தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.